பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**தனிநபர் ஆரோக்கிய காப்புறுதிப் பத்திரம்**

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய பிரதான அம்சங்களின் சாராம்சத்தை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தை வாசிக்க வேண்டும்,

**1. காப்புறுதி காப்பீட்டு வகை**

தனிநபர் ஆரோக்கிய காப்புறுதிப் பத்திரமானது, மருத்துவமனையில் தங்கியிருக்க அவசியப்படும் விபத்து அல்லது நோயின் காரணமாக உங்களுக்கு ஏற்படும் தேவையான வைத்திய செலவினங்களை காப்பீடு செய்வதினூடாக உங்களுக்கும் உங்களது குடும்ப அங்கத்தினர்களுக்கும் நிதிப் பாதுகாப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப் பட்டதாகும்.

**2. பிரதான பயன்பாடுகள் (எதனைக் காப்பீடு செய்கின்றது)**

உங்களுக்கான குறிப்பான காப்பீடும் பயன்பாட்டு வரையறைகளும் உங்களது காப்புறுதிப் பத்திர அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளன.

2.1 **மருத்துவமனையில் தங்கியிருத்தல் (உள்வாரி நோயாளி பராமரிப்பு) –** விபத்து அல்லது நோயொன்றின் காரணமாக 24 மணித்தியாலங்களுக்குக் கூடுதலாக நீங்கள் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது வைத்திய செலவினங்களை நாம் காப்பீடு செய்வோம்.

2.2 **நாள் பராமரிப்பு சிகிச்சை –** 24 மணித்தியாலங்களுக்குக் குறைவாக நீங்கள் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது, (உங்கள் காப்புறுதிப் பத்திர அட்டவணையின் அனுபந்தம் 1 இல் பட்டியலிடப்பட்டுள்ள) குறிப்பான 106 சத்திர சிகிச்சைகளை நாம் காப்பீடு செய்வோம். இப்பயன்பாடானது, 6 மாத காத்திருப்பு காலத்தைக் கொண்டதாகும்.

2.3 **கோரிக்கையின்மை நலக் கொடை –** ஒரு வருடம் முழுவதும் நீங்கள் கோரிக்கை எதனையும் முன்வைக்காதிருந்தால், உங்களுடைய காப்புறுதிப் பத்திர புதுப்பித்தலின் போது காப்புறுதிக் கட்டணத்தில் 5% கழிவு பெறுவீர்கள். இது தொடர்ச்சியாக ஒவ்வோர் வருடமும் அதிகரித்துச் சென்று, தொடர்ச்சியான

முதல் மூன்று கோரிக்கையற்ற வருடங்களின் பின்னர் ஆகவும் கூடியது 15% வரை அதிகரிக்கும். (பகுதி 3.6)

2.4 **கடல் கடந்த சிகிச்சை –** அவசியப்படும் செயன்முறை உள்ளூரில் இல்லாது இருந்தால் மட்டுமே இலங்கைக்கு வெளியிலான சிகிச்சை காப்பீடு செய்யப்படும். (பகுதி 3.4)

2.5 **வெளி நோயாளர் (OPD) சிகிச்சை -** நீங்கள் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டாதிருக்கும் நிலையில், வைத்திய ஆலோசனைகள், பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகளை இது காப்பீடு செய்யும். (பகுதி 1.7)

2.6 **கர்ப்பமும் பிரசவமும் –** கர்ப்பம், குழந்தை பிறப்பு (சிசேரியன் உட்பட) மற்றும் பிரசவத்துக்கு முந்திய / பிந்திய பராமரிப்பு என்பவற்றையும் இது காப்பீடு செய்யும்.

**3. தேர்வுக்குரிய சேர்க்கைகள் (அவற்றை நீங்கள் தெரிவு செய்து செலுத்தியிருந்தால் மாத்திரம்)**

3.1 **கடும் சுகயீன காப்பீடு –** (புற்று நோய், இருதய வலி மற்றும் பக்கவாதம் போன்ற) குறிப்பான 15 கடும் சுகயீன பட்டியலுக்கான மேலதிக காப்பீட்டை நீங்கள் கொள்வனவு செய்யலாம். இப்பயன்பாடானது, 6 மாத காத்திருப்பு காலத்தைக் கொண்டதாகும்.

**4. பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதது எது?)**

4.1 **முன்னிருந்த நிலைமைகள் –** நீங்கள் முன்னரே கொண்டிருந்த அல்லது காப்புறுதிப் பத்திரம் தொடங்குமுன்னர் நீங்கள் அறிந்திருந்த ஏதும் ஆரோக்கிய நிலைமைகள், சுகயீனங்கள் அல்லது குணங்குறிகள் காப்பீடு செய்யப்படவில்லை. (பகுதி 1.1)

4.2 **முதல் 30 நாள் காத்திருப்பு காலம் –** காப்புறுதிப் பத்திரத்தின் முதல் 30 நாட்களின் போது மருத்துவமனையில் தங்கியிருப்பதற்கு காப்பீடு இல்லை. எனினும், விபத்துக்கான சிகிச்சை முதல் நாளில் இருந்தே ஆரம்பிக்கும். (பகுதி 1.2)

4.3 **பற் சிகிச்சை –** விபத்து ஒன்றைத் தொடர்ந்து மருத்துவமனையில் தங்கியிருப்பது அவசிமானால் அன்றி, காப்பீடு செய்யப்பட்டில்லை. (பகுதி 1.16)

4.4 **மனோவியல் மற்றும் மனநிலை சுகயீனம் –** மன ஆரோக்கிய நிலைமைகள், மனவழுத்தல் அல்லது மனோவியல் கோளாறுகள் விலக்கப்பட்டுள்ளன. (பகுதி 1.8)

4.5 **சுய ஊறு விளைவித்தல் மற்றும் பொருட்களின் துஷ்பிரயோகம் –** தற்கொலை முயற்சி அல்லது மது அல்லது போதைப் பொருட்களின் துஷ்பிரயோகத்தினால் விளைந்த நிலைமைகள். (பகுதி 1.3)

4.6 **அழகியல் மற்றும் பார்வை / கேள்வி பரிகாரங்கள் –** ப்ளாஸ்டிக் சத்திர சிகிச்சை, அழகியல் சிகிச்சைகள் மற்றும் கண் பார்வை அல்லது கேள்விப் புலனை விருத்தி செய்வதற்கான சத்திர சிகிச்சைகள்.காப்பீடு செய்யப்பட்டில்லை. (பகுதி 1.3, 1.19)

4.7 **ஆபத்தான செய்ற்பாடுகள் –** ஸ்கூபா சுழியோடல், ஓட்டப் பந்தயம் அல்லது மலையேறுதல் என்பன விலக்கப்பட்டுள்ளன. (பகுதி 1.6)

*முழு பட்டியலுக்கும் உங்களது காப்புறுதிப் பத்திரத்தின் பகுதி 1 ஐ வாசிக்கவும் (விடுகைகள் பிரயோகமாகும்.)*

5. **தவணைக் கட்டணம் செலுத்தும் முறை**

உங்கள் காப்புறுதிக் கட்டணத்தைச் வருடாந்தம் செலுத்த முடியும். பணம், காசோலை அல்லது வங்கிப் பரிமாற்றம் போன்ற முறைகளினால் செலுத்தலாம். காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டு உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை நீங்கள் பெற்ற பின்னர் மட்டுமே உங்களது காப்பீடு நடைமுறையாகும்.

6. **பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களை / பயன்பெருநர்களை கொண்டிருப்பதன் முக்கியத்துவம்.**

இக்காப்புறுதிப் பத்திரமானது பயன்பாடுகளை நேரடியாக உங்களுக்கே (காப்புறுதி செய்யப்பட்ட நபருக்கு) செலுத்தும். இது ஆயுள் காப்புறுதி இல்லையாகையால், கோரிக்கை செலுத்துகைக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் ஒருவர் அவசியமில்லை.

7. **எனது பொறுப்புக்கள் யாவை? (உங்களது வெளிப்படுத்தும் கடமை)**

எம்முடன் உண்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கின்றது.

7.1 **நீங்கள் காப்புறுதிப் பத்திரத்தை கொள்வனவு செய்யும் போது அல்லது புதுப்பித்தலின் போது** – உங்களுடைய ஆரோக்கியம் மற்றும் வைத்திய சரிதை பற்றிய பூரணமானதும் சரியானதுமான தகவல்களை நீங்கள் வழங்க வேண்டும். உங்களது ஆரோக்கியம், தொழில் அல்லது விலாசம் பற்றிய ஏதும் மாற்றங்களையும் நீங்கள் எமக்கு அறிவிக்க வேண்டும். (பகுதி 3.7)

7.2 **காப்புறுதி காலத்தின் போது** – சுகயீனங்களையும் விபத்துக்களையும் தவிர்ப்பதற்கான நியாயமான கவனத்தை நீங்கள் மேற்கொள்ள வேண்டியதோடு, தகைமை பெற்ற வைத்தியரொருவரினால் வழங்கப்பட்ட வைத்திய ஆலோசனைகளை கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் வேறேதும் வைத்திய காப்புறுதிப் பத்திரங்களைக் கொண்டிருந்தால் அதனையும் எமக்கு அறிவிக்க வேண்டும். (பகுதி 3.8, 3.15)

தகவல்களை வெளியிடத் தவறுவது, காப்புறுதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுவதற்கு அல்லது கோரிக்கை நிராகரிக்கப்படுவதற்கு வழிகோளலாம்.

8. **கோரிக்கையை நான் எவ்வாறு முன்வைப்பது?**

8.1 **படிமுறை 1** – எமக்கு அறிவிக்கவும்

அ. கோரிக்கைக்கு வழிகோளத்தக்க ஏதும் சம்பவம் பற்றி 60 நாட்களுக்குள் எமக்கு நீங்கள் அறிவிக்க வேண்டும்.

8.2 **படிமுறை 2** – பணமற்ற சேவைக்கு முன் அங்கீகாரமளித்தல்.

அ. திட்டமிட்ட மருத்துவமனையில் தங்குவதற்கு, முன் அங்கீகாரம் பெறுவதற்காக முன்னதாகவே எம்முடன் தொடர்பு கொள்ளவும். நாம் மருத்துவமனைக்கு நேரடியாகவே செலுத்தும் வகையில், பணமற்ற வசதியை ஏற்பாடு செய்வதற்கு இது எமக்கு இடமளிக்கின்றது.

8.3 **படிமுறை 3** – தேவைப்படும் ஆவணங்களை சமர்ப்பிக்கவும்

அ. (நீங்கள் முதலில் செலுத்தும்) கோரிக்கைகளுக்கு ஈடு செய்வதற்கு முதற் பிரதிகளுடன் சகல ஆவணங்களையும் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை படிவத்தையும் சமர்ப்பிக்கவும்.

ஆ. பிரதான ஆவணங்கள் – எல்லா ஆவணங்களுடனும் கோரிக்கைப் படிவம், அனுமதிக்கான வைத்தியரின் மருந்துச் சீட்டு, வகுப்பீடு செய்யப்பட்ட மருத்துவமனை பற்றுச் சீட்டுக்களின் முதற் பிரதிகள், செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் முதற் பிரதிகள் மற்றும் வெளியேற்ற சாராம்சம்.

8.4 **படிமுறை 4** – கோரிக்கை சமர்ப்பித்தலும் தொடர்பும்

அ. கோரிக்கை அவசர இலக்கமும் விசாரணைகளும் – +94 11 2428428

ஆ. கோரிக்கை சமர்ப்பிப்பதற்கான மின்னஞ்சல் – medicalclaim@fairfirst.lk

இ. நேரடியாக சமர்ப்பித்தல் –

பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்,
எக்சஸ் கோபுரம் 11 (14 ஆம் மாடி),
இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02.

*முழு விபரங்களுக்கும் உங்களது காப்புறுதிப் பத்திரத்தின் பகுதி 4 ஐ உசாவவும் (கோரிக்கை நடைமுறை)*

## 9. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 10. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎ +94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

## 11. வேறேதும் முக்கிய தகவல்கள்

11.1 **இரத்துச் செய்தல்** – எமக்கு எழுத்து மூலம் அறிவிப்பதனால் நீங்கள் எந்நேரத்திலும் காப்புறுதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய முடியும். நாமும் உங்களுக்கு பதிவு செய்யப்பட்ட கடிதமொன்றை அனுப்புவதன் மூலம் காப்புறுதிப்

பத்திரத்தை இரத்துச் செய்ய முடியும். மீளளிப்பானது, காப்புறுதிப் பத்திரம் எப்போது இரத்துச் செய்யப்படுகின்றது மற்றும் கோரிக்கையேதும் முன் வைக்கப்பட்டிருக்கின்றதா என்பதைப் பொறுத்ததாகும். (பகுதி 3.10, 3.11, 3.12)

11.2 **கோரிக்கை கால வரையறை –** கோரிக்கை தொடர்பான சட்ட நடவடிக்கை ஏதும் சம்பவத்தின் 12 மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும். (பகுதி 3.16)

11.3 **வயதெல்லை –** இக்காப்புறுதிப் பத்திரமானது 18 முதல் 70 வயது வரையானவர்களுக்கும் விவாகமாகாதவர்களும் தொழிலற்றவர்களுமான 3 மாத முதல் 25 வயது வரையான சார்ந்திருக்கும் சிறார்களுக்கும் கிடைக்கும்.

**முக்கிய குறிப்பு -** பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.